# வவுனியா தெற்கு சிங்ஹல பிரதேச சபை

## வவுனியா மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஜூலை 11 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 24 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஆகஸ்ட் 08 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

----------------------

இந்த அறிக்கையின் 1.3.1 மற்றும் 1.3.2 பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்கள் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந் நிதிக் கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்கவில்லை.

1.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) காசுப்பாய்ச்சல் கூற்றொன்று சமர்பித்திருக்கவில்லை.

(ஈ) 2013 திசெம்பர் 18 திகதி கொள்வனவு செய்திருந்த நீர்ப் பம்புவின் பெறுமதியான ரூபா 17,250 தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(உ) திரண்ட நிதியத்தில் 2012 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இறுதி மீதி ரூபா 11,555,527 ஆகக் காணப்பட்டதுடன் 2013 நிதிக் கூற்றுக்களில் திரண்ட நிதியத்தின் ஆரம்ப மீதி ரூபா 11,867,163 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 311,638 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(ஊ) 2013 திசெம்பர் 31 திகதி மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தில் பங்களிப்பு கணக்கின் மீதி ரூபா 41,447,834 ஆக காணப்பட்டதுடன் கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் அம்மீதி ரூபா 44,560,885 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 3,113,051 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(எ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றின் பிரகாரம் 2011 மற்றும் 2012 ஆண்டுகள் தொடர்பாக கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 346,010 ஆக காட்டப்பட்டிருந்த போதிலும் அவ் வருடங்கள் தொடர்பாக சபைக்கு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 468,917 தொகை என காணிப்பதிவாளர் அறிவித்திருந்தார்.

(ஏ) மீளாய்வாண்டிற்கான நீதிமன்றத் தண்டப்பணம் என ரூபா 638,494 இனை கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் கணக்காய்விற்குக் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் ஆண்டிற்கான நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 1,359,659 தொகை என ரூபா 721,165 இனால் வருமானம் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதவியணிக் கடன் மீதி ரூபா 2,730,929 தொகை எனினும் பிரதான பேரேட்டில் பதவியணிக் கடன் கணக்கு ஒன்று பேணப்பட்டிருக்காமையால் மீதியின் பிழையற்ற தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஒ) சபையினால் பிரதான பேரேடு ஒன்று, பொழிப்பு வருமானப் பதிவேடு ஒன்று மற்றும் நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்படாமையால் சபையின் கொடுக்கல் வாங்கல்களில் மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களில் பிழையற்ற தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---------------------------------------------------------------

(அ) பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

-------------------------------------------------------------------------------

2014 செப்டம்பர் 01 திகதி அளவில் கணக்காய்வு ஐயவினா ஒன்றிற்கு பதில் அனுப்பியிருக்கவில்லை. அத்துடன் அவ் ஐய வினாவுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களில் கணக்கிடக் கூடிய பெறுமதி ரூபா 10,706,781 ஆகும்.

(ஆ) தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமை

-------------------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 1,093,867 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமான சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

2. நிதி மீளாய்வு

-------------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,176,575 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,036,924 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

------------------------------

2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

------------------------------------------------------------------------------------------------------------

தலைவரினால் மீளாய்வாண்டிற்காக சமர்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | உள்ளவா றான | திசெம்பர் 31 திகதிய உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வாடகை | 120,000 | 431,587 | 60,650 |
| (ii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,040,000 | 870,990 | - |
| (iii) | ஏனைய வருமானங்கள் | 19,608,507 | 12,948,546 | 1,912,061 |

2.2.2 வாடகை

-------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. 2008 செப்டம்பர் 25 திகதிய இலக்கம் ஆமப/08/1737/306/110 கொண்ட அமைச்சரவை செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் கடை வாடகையினை பெறுமதி மதிப்பீட்டு திணைக்களத்தின் மூலம் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டும் எனினும் அவ்வாறு மேற்கொள்ளப்படாமல் சபையினால் தீர்மாணிக்கப்பட்ட கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.

ii. சபைக்குச் சொந்தமான 05 கடைகள் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டதுடன், அதன் மூலம் ரூபா 36,500 வருமானம் ஒன்றினை சபை இழந்துள்ளது.

iii. 1980 திசெம்பர் 31 திகதிய இலக்கம் 1980/46 கொண்ட உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றுநிருப ஏற்பாடுகளின் பிரகாரம் குறைந்தபட்சம் 05 வருடங்களுக்கு ஒரு முறையேனும் வாடகையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

--------------------------------------------

வருடாந்த கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு வர்த்தக அனுமதிப்பத்திர கட்டணம் அறவிடப்பட வேண்டிய இடங்கள் பற்றி இனங்கண்டிருக்கவில்லை.

2.2.4 ஏனைய வருமானங்கள்

-----------------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வாராந்த சந்தைகள் நடத்தப்படும் காணியின் அளவு, உள்வரக் கூடிய வாகனங்களின் எண்ணிக்கை, வியாபாரம் செய்யும் வியாபாரிகளின் எண்ணிக்கை, நுகர்வோரின் எண்ணிக்கை, வியாபார பொருட்களின் வகைகள், சந்தைக்கு வழங்கியுள்ள வசதிகள் என்பன தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு கிடைக்க வேண்டிய வருமானம் தொடர்பாக தீர்மானம் ஒன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம்

வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அத்துடன் சபை தீர்மானங்களின் மூலம் கட்டணங்கள் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,083,769 உம் மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 468,917 உம் பெற வேண்டியிருந்தது.

2.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறை பயன்பாட்டு பௌதீக வளங்கள்

---

சபைக்குச் சொந்தமான 13 வாகனங்கள் ஒரு வருடத்திற்கு மிகையான காலம் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதெனவும் அவற்றில் 10 வாகனங்கள் விவசாய மற்றும் ஏனைய விடயங்களில் ஈடுபடுத்துவதன் மூலம் வருமானம் ஈட்டுவதற்கு முடியுமாக இருந்தது என அவதானிக்கப்பட்டது.

2.4 முகாமைத்துவ மற்றும் செயற்பாட்டு திறமையின்மை

---

(அ) முகாமைத்துவ திறமையின்மை

---

(i) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,972,711 ஆக காணப்பட்டதுடன் அப் பெறுமதியில் ஒரு வருட காலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 813,542 ஆகும்.

(ii) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்கு சொந்தமான வங்கி நடைமுறை கணக்கு ஒன்றின் மீதி ரூபா 4,716,060 ஆக காணப்பட்டதுடன் அப்பணத்தினை ஏதேனும் குறுகிய கால முதலீட்டில் ஈடுபடுத்தி வட்டி வருமானம் ஒன்றினை உழைப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) செயற்பாட்டு திறமையின்மை

---

அகற்றப்பட வேண்டிய பண்டங்கள் தொடர்பாக 2009 நவம்பர் 13 திகதிய இலக்கம் 438 கொண்ட அரச நிதிச் சுற்றுநிருபத்தின் மூலம் வழங்கியிருந்த ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கவில்லை.

2.5 செயலாற்றுகை

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆண்டிற்கான பாதீட்டின் மூலம் 25 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 3,123,000 தொகை ஒன்று குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது.

ஆ) பாதீட்டின் மூலம் மீளாய்வாண்டின் போது மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருந்த ரூபா 2,300,000 இற்கான 02 நலன்புரி செயற்திட்டங்களை செயற்படுத்தியிருக்கவில்லை.

(இ) வருமான நிலைமையினை மேம்படுத்துவற்கான திட்டமொன்றான முச்சக்கர வண்டி தரிப்பிடங்கள் பதிவு செய்து கட்டணம் அறவீடு செய்வதற்காக 2011 ஜூன் 20 மற்றும் 2013 ஏப்ரல் 22 நடைபெற்ற பொதுக் கூட்டங்களில் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அத்தீர்மானங்களை அமுல் நடாத்தியிருக்கவில்லை.

(ஈ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| நிறைவேற்று | 02 | 01 | 01 |
| இரண்டாம் தரம் | 20 | 18 | 02 |
| ஆரம்ப | 27 | 13 | 14 |
| | 49 | 32 | 17 |

வெற்றிடங்கள் காணப்படும் பதவிகளுக்கு ஊழியர்கள ஆள் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் நிருவாகம்